# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 02 | Issue: 14 | 4 Pages | 14.8.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 02 | இதழ்: 14 | 4 பக்கங்கள் | 14.8.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## தந்தை தூய்மை பணியாளர், மகள் நகராட்சி ஆணையர்: முதல்வர் கையால் பணி ஆணை பெற்று சாதித்த பெண்

மன்னார்குடி. ஆக. 14

மன்னார்குடி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றியவரின் மகள் டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வில் வெற்றி பெற்று திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையராக நியமனம் பெற்று அதற்கான ஆணையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இருந்து பெற்றுள்ளது தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி புதுப்பாலம் சத்தியமூர்த்தி மேட்டு தெருவை சேர்ந்தவர்கள் சேகர் – செல்வி தம்பதியர். இவர்களது ஒரே மகள் துர்கா. சேகர் மன்னார்குடி நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றியவர். தாய் செல்வி பல வீடுகளில் வீட்டு வேலை செய்து வந்துள்ளார். துர்கா மன்னார்குடியில் உள்ள தூய வளனார் அரசு உதவி பெறும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 வரை படித்தார். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் மன்னார்குடி ராஜகோபாலசாமி அரசு கலைக் கல்லூரியில் படித்து இயற்பியல் பட்டம் பெற்றார்.



தூய்மை பணியாளரின் மகள் துர்கா ''கொடிது கொடிது வறுமை கொடிது! அதனினும் கொடிது இளமையில் வறுமை!!" எனும் அவ்வை மூதாட்டியின் வரிகளை அனுபவப் பூர்வமாக உணர்ந்தவர். மதுராந்தகத்தைச் சேர்ந்த நிர்மல் குமார் என்பவருக்கு மகளை 2015ல் திருமணம் செய்து வைத்த அவரது தந்தை சேகர் கடந்த வருடம் பணியில் இருக்கும் காலத்திலேயே இறந்து விட்டார். திருமணம் ஆன பின்பும் கணவரின் ஆதரவோடு கடந்த 2019ல் டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதத் தொடங்கிய துர்கா அந்த முயற்சியை தான் வெற்றி பெறும் வரை கைவிடவே இல்லை. முயற்சிகள் தவறலாம் முயற்சிக்க தவறலாமா? எனும் வாசகம் மட்டும் அவருக்குள் ஓடிக்கொண்டே இருந்தது.

2023ல் குரூப் 2 முதன்மை தேர்வு எழுதி 2024ல் நேர்முகத் தேர்வில் 30க்கு 30 மதிப்பெண்கள் பெற்றார். காவல்துறையின் முக்கிய பிரிவான எஸ்பிசி ஐடியில் அதிகாரியாக பணியாற்றும் வாய்ப்பு வந்தும் தன் தந்தை பணிபுரிந்த நகராட்சி துறையிலேயே பணிபுரிந்து அவருக்கு பேரும் புகழும் சேர்க்க வேண்டும் என்பதே அவரது லட்சியமாக இருந்தது. அதனால் தான் அவர் நகராட்சி ஆணையர் பதவிக்கு விருப்பம் தெரிவித்து அந்தத்துறையை தேர்வு செய்தார்

இந்நிலையில், சென்னையில் நேற்று நடந்த விழா ஒன்றில் துர்கா, திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையராக நியமனம் பெற்று அதற்கான ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இருந்து பெற்று கொண்டார். இது தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

நகராட்சியில் கடைநிலை ஊழியராக பணியாற்றிய ஒருவரின் மகள் நகராட்சியின் ஆணையராக பதவி ஏற்க இருப்பது, தாய் – தந்தையரின் லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிற விடாமுயற்சியும், எந்த நிலையில் இருந்தாலும் கல்வியை விடாப்பிடியாக பற்றிக் கொண்டு பயின்று வந்தால் எந்த நிலைக்கு வேண்டுமானாலும் முன்னேறலாம் என்பதற்கு சாட்சியாகும். விரைவில் நகராட்சி ஆணையராக பதவியேற்க இருக்கும் துர்கா இளம் தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தான்!

## கர்நாடகாவில் அக்டோபர் 3ம் தேதி தொடங்கும் தசரா விழா, அக்., 12ம் தேதி வரை நடக்கும்: முதல்வர் சித்தராமையா அறிவிப்பு




பெங்களூரு, ஆக. 14

கர்நாடகாவில் அக்டோபர் 3ம் தேதி தொடங்கும் தசரா விழா, அக்., 12ம் தேதி வரை நடக்கும் என முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார். கடந்த ஆண்டு, மாநிலத்தில் வறட்சி நிலவியதால், வழக்கத்தை விட, கொண்டாட்டம் வெகுவாகக் கொண்டாடப்பட்டது. இருப்பினும், கர்நாடகாவில் இந்த ஆண்டு அதிக அளவு மழை பெய்துள்ளது. இதனால் இந்தாண்டு தசரா விழா மிகவும் விமரிசையாக கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக முதல்வர் சித்தராமையா தலைமையில், பெங்களூரு விதான் சவுதாவில், நேற்று மாலை உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது.

இந்த கூட்டத்தில் இந்தாண்டு தசரா விழா மிகவும் விமரிசையாக கொண்டாடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டத்தில் பேசிய சித்தராமையா; அக்டோபர் 3ம் தேதி காலை 9:15 மணிக்கு, சாமுண்டீஸ்வரி தேவிக்கு மலர்துாவுவதன் மூலம், தசரா விழா துவங்கப்படும். அதே நாளில், தசரா கண்காட்சியும் துவக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசின் சாதனைகள், வாக்குறுதி திட்டங்கள் அடையாளப்படுத்தப்படும். வரும் 21ம் தேதி காலை 10:10 மணிக்கு, ஹுன்சூரின் வீரனஹொசஹள்ளி கிராமத்தில் யானைகளுக்கு பூஜை செய்து, காட்டில் இருந்து, தசரா விழாவுக்காக மைசூருக்கு அனுப்பி வைக்கப்படும். அக்., 3ம் தேதி துவங்கும் தசரா விழா, அக்., 12ம் தேதி வரை நடக்கும். ஒன்பது நாட்களும் பாரம்பரிய முறைப்படி கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

விஜயதசமி நாளான அக்., 12ம் தேதி பகல் 1:41 மணி முதல் 2:10 மணிக்குள் நந்தி கொடிக்கு பூஜை செய்து, ஜம்பு சவாரி ஊர்வலம் துவக்கி வைக்கப்படும். மாலை 4:00 மணிக்கு சாமுண்டீஸ்வரி தேவியை தங்க அம்பாரியில் சுமக்கும் கஜபடைக்கு மலர் துாவி வணங்கப்படும். சுற்றுலா பயணியரை கவரும் வகையில், நகர் முழுதும் மின் விளக்கு அலங்காரம் செய்யப்படும். கடந்தாண்டு ஒரு வாரம் விஸ்தரிக்கப்பட்டது. இம்முறை தசரா முடிந்த பின் 21 நாட்கள் வரை மின் விளக்கு அலங்காரம் விஸ்தரிக்கப்படும். உள்ளூர் கலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறினார்.

## 11 நாட்களே பதவியில் இருந்த ஈரான் துணை அதிபர் ராஜினாமா: காரணம் என்ன..?



டெஹ்ரான், ஆக. 14

ஈரானில் கடந்த மே மாதம் அதிபர் இப்ராகிம் ரைசி ஹெலிகாப்டர் விபத்தில் மரணம் அடைந்தார். பின்னர் அங்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வென்று மசூத் பெசெஷ்கியான் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் முன்னாள் வெளியுறவுத்துறை மந்திரியான முகமது ஜாவத் ஜரீப் (வயது 64) நாட்டின் மூலோபாய விவகாரங்களுக்கான துணை அதிபராக கடந்த 2ந்தேதி நியமிக்கப்பட்டார்.

இந்தநிலையில் நாட்டின் புதிய அமைச்சரவை பட்டியலை அதிபர் மசூத் பெசெஷ்கியான் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) முன்மொழிந்தார். இதில் ஒரு பெண் உள்பட 19 எம்.பி.க்கள் இருந்தனர். இந்த பட்டியல் முன்மொழியப்பட்ட சில மணி நேரங்களில் துணை அதிபர் முகமது ஜாவத் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

தான் முன்மொழிந்த 19 உறுப்பினர்களை கொண்ட அமைச்சரவை அமைப்பதில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அவர் பதவியை ராஜினாமா செய்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. துணை அதிபர் ராஜினாமா செய்தது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. துணைஅதிபரின் ராஜினமா முடிவு ஈரான் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## துருக்கியில் கத்திக்குத்து தாக்குதல் 5 பேர் காயம்




அங்காரா, ஆக. 14

துருக்கி நாட்டின் எஸ்கிசிர் மாகாணம் எஸ்கிசிர் நகரில் உள்ள தேநீர் கடையில் இன்று கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் நடைபெற்றது. இன்று அந்த கடையில் வாடிக்கையாளர்கள் தேநீர் குடித்துக்கொண்டிருந்தபோது அங்கு ஹெல்மெட், துப்பாக்கி துளைக்காத கவச உடை அணிந்து கத்தியுடன் வந்த இளைஞர் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினார்.

இந்த கத்திக்குத்து தாக்குதலில் 5 பேர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இதில், 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

மேலும், தாக்குதல் நடத்திய அர்டா என்ற இளைஞரையும் போலீசார் கைது செய்தனர். மேலும், தாக்குதல் நடத்திய இளைஞரிடமிருந்து கோடாரியும் கைது செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.


## ஆணவக்கொலைகளை ஊக்குவிக்கும் வகையில் பேச்சு; நடிகர் ரஞ்சித் மீது போலீசில் புகார்: போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் விசிக அளித்தது

சென்னை, ஆக. 14

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில துணை பொதுச்செயலாளர் வன்னியரசு நேற்று அளித்துள்ள புகார்மனுவில் கூறியிருப்பதாவது:

திரைப்பட நடிகர் ரஞ்சித் தான் இயக்கி நடித்துள்ள 'கவுண்டம்பாளையம்' என்ற திரைப்படத்தில் திட்டமிட்டு சமூக அமைதியை சீர்குலைக்கிற வகையில் பல்வேறு காட்சிகளை அந்த திரைப்படத்தின் டிரெய்லரில் வைத்திருந்தார். இது தொடர்பாக நாங்கள் காவல்துறை டிஜிபியிடம் ஏற்கனவே புகார் அளித்திருந்தோம். திரைப்பட தணிக்கை குழுவிடமும் புகார் அளித்திருந்தோம்.

இந்நிலையில் கடந்த 10ம் தேதி செய்தியாளர்களை சந்தித்த நடிகர் ரஞ்சித், ஆணவ படுகொலைகளை நியாயப்படுத்தும் வகையில் பேசியுள்ளார். ஆணவக் கொலைகளை ஊக்குவிக்க வேண்டும்




என்ற நோக்கத்தோடு திட்டமிட்டு இவ்வாறு மோசமாக நடிகர் ரஞ்சித் கருத்து தெரிவித்து இருக்கிறார். ஏற்கனவே நடந்த படுகொலைகளுக்கும் நியாயம் இருக்கிறது என்று சட்டத்திற்கு புறம்பான வகையிலும் பேசி வருவது என்பது மிகப்பெரிய ஒரு தீவிரவாத செயலாகத்தான் பாக்க வேண்டும். எனவே நடிகர் ரஞ்சித் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## கஞ்சா வைத்திருந்த வழக்கு; யூடியூபர் சங்கர் குண்டாசில் கைது

தேனி, ஆக 14

பெண் போலீசார் குறித்து அவதூறாக யூடியூப் சேனலில் பதிவிட்டது சம்பந்தமாக, கோவை சைபர் கிரைம் போலீசாரால் கடந்த மே 3ம் தேதி தேனி அருகே பழனிசெட்டிபட்டியில் யூடியூபர் சங்கர் கைதானார். பின்னர் அவரது கார் டிரைவரான பரமக்குடி ராம்பிரபு (22), நண்பர் சென்னை நுங்கம்பாக்கம் ராஜரத்தினம் (43) ஆகியோர் தங்கியிருந்த அறையில் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, 3 பேர் மீதும் பழனி செட்டிப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும், கஞ்சா சப்ளை செய்த பரமக்குடி மகேந்திரன் (24), பாலமுருகனையும் கைது செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு மதுரையில் உள்ள போதைப்பொருள்



தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடக்கிறது.

இந்நிலையில் தேனி எஸ்பி சிவ பிரசாத் பரிந்துரைப்படி யூடியூபர் சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய கலெக்டர் ஷஜீவனா உத்தரவிட்டார்.

அதன்படி அவர் நேற்று மாலை குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.



## போதை பொருள் ஒழிப்பு நடவடிக்கையை வரவேற்கிறேன்: கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேட்டி

கோவை, ஆக. 14

கோவை விமான நிலையத்தில் மகாராஷ்டிரா கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: ஜவுளி துறைக்கு அதிகமான உதவிகளை மாநில அரசு செய்தால்தான் இந்த தொழில் காலத்தை கடந்து நிற்கும். உலகம் முழுவதும் ஜவுளி தொழில் வளர்ந்து வருகிறது. வங்கதேசத்தில் இருந்து வியட்நாம் வரை இன்றைக்கு ஜவுளி தொழில் பிரமாண்டமாக இருந்து வருகிறது.

பர்மாவில் கூட ஜவுளி தொழிலுக்கு புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. நம்முடைய பகுதியை விட்டு ஜவுளி தொழில் வேறு நாட்டிற்கு, வேறு மாநிலத்திற்கோ சென்று விடக்கூடாது என்று நினைத்தால் மாநில அரசு ஜவுளி துறை சேர்ந்த அத்தனை பேரையும் அழைத்து அவர்களது குறைகளை முழுமையாக கேட்டு உரிய உதவிகளை செய்ய வேண்டும்.

போதை ஒழிப்பு நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. கஞ்சா மற்றும் இதர போதை வஸ்துகளை ஒழிக்க முதல்வர் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளையும் நான் வரவேற்கிறேன். அனைவரும் வரவேற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பணியில் ஈடுபாடும் செயல்படுத்துதலும் கருத்தரங்கு

இலஞ்சி, ஆக. 14

இலஞ்சி டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பணியில் ஈடுபாடும் செயல் படுத்துதலும் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்குக்கு கல்லூரி தாளாளர் ராஜகுமார் தலைமை வகித்தார் முதல்வர் (பொ) தங்கம் வரவேற்றார் கல்வியியல் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், இலஞ்சி




கல்வியியல் கல்லூரியின் கல்வி ஆலோசகருமான செல்வகுமார் பணியில் ஈடுபாடு காட்டுதல் மற்றும் செயல்படுத்துதல் குறித்து சிறப்புரையாற்றினார் தமிழ்த்துறை பேராசிரியர் லீதியாள் சொர்ண ஜெயா வாழ்த்தி பேசினார்

உதவி பேராசிரியர்கள், ஷீலா நவரோசி, ஜெனிபர், ஹெப்சி, நூலகர் முனைவர் ஏஞ்சலின், உடற்கல்வி ஆசிரியர் ஐசக், அலுவலக பணியாளர் பிரெட்ரிக், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் பேராசிரியர் ஜெனிபர் தொகுத்து வழங்கினார்

# போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு கைப்பற்றிய 7,500 கிலோ கஞ்சா தீவைத்து அழிப்பு



செங்கல்பட்டு, ஆக. 14

தமிழகம் முழுவதும் நுண்ணறிவு பிரிவு மூலம் கைப்பற்றப்பட்ட 7,500 கிலோ கஞ்சாவை போலீசார் தீயிட்டு கொளுத்தி அழித்தனர். செங்கல்பட்டு அடுத்த தென்மேல்பாக்கம் ஊராட்சியில் தனியாருக்கு சொந்தமான மருத்துவ கழிவுகளை எரியூட்டும் நிறுவனம் உள்ளது.

இங்கு வடக்கு மண்டல காவல் துறை எல்லைக்குட்பட்ட செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 10 மாவட்டங்களிலிருந்து 212 கஞ்சா வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 956.65 கிலோ கஞ்சா மற்றும் போதைப்பொருட்களும், நுண்ணறிவு பிரிவு மூலம் தமிழகம் முழுவதிலும் இருந்து கைப்பற்றிய 6,500 கிலோ கஞ்சா என மொத்தம் 7,500 கிலோ கஞ்சாவை விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. திஷா மிட்டல் தலைமையில் எரிவாயுவில் போட்டு அழித்தனர்.

இதில் செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய் பிரணீத், போதை பொருள் நுண்ணறிவு பிரிவு கண்காணிப்பாளர் சாம்சன், செங்கல்பட்டு மாவட்ட கலால் டிஎஸ்பி வேல்முருகன், விழுப்புரம் டிஎஸ்பி பிரதீப்குமார், செங்கல்பட்டு தாலுகா போலீஸ் இன்ஸ்பெக்டர் நடராஜன் மற்றும் மருத்துவக்கழிவு எரியூட்டும் நிறுவனத்தின் பொது மேலாளர் சிவக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# இளையனார்வேலூர் ஊராட்சியில் ரேஷன்கடை கோரி கலெக்டரிடம் மனு



காஞ்சிபுரம், ஆக. 14

காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி மோகனிடம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் இளையனார் வேலூர் ஊராட்சி மன்ற தலைவர் கே.கமலக்கண்ணன் கோரிக்கை மனு அளித்தார். அதில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் இளையனார்வேலூர் ஊராட்சியில் 1000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். அந்தந்த பகுதிகளுக்கு ரேஷன் கடை உள்ளது. ஆனால், வள்ளிமேடு என்ற பகுதியில் மட்டும் ரேஷன் கடை இல்லை.

இதனால், அப்பகுதி மக்கள் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். வள்ளிமேடு பகுதியில் 180 ரேஷன் கார்டுகள் உள்ளன. இப்பகுதி மக்களின் நலன்கருதி வள்ளிமேடு பகுதியிலேயே புதிய ரேஷன் கடை கட்டித் தந்து, ரேஷன் பொருட்களை வழங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுராந்தகம் பகுதியில் கொட்டித் தீர்த்த கனமழை 1000 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கி சேதம்: விவசாயிகள் வேதனை, வீடுகளிலும் தண்ணீர் புகுந்தது



மதுராந்தகம், ஆக. 14

மதுராந்தகம் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று விடியற்காலை கொட்டித் தீர்த்த கனமழையால், அறுவடைக்கு தயாரான 1000 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்ததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். மேலும் வீடுகளிலும் மழைநீர் புகுந்ததால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டனர். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மற்றும் சுற்றியுள்ள கிராம பகுதிகளில், கடந்த சில தினங்களாக பகல் நேரத்தில் கடுமையான வெயில் சுட்டெரித்தும், இரவு நேரங்களில் மழையும் பெய்தும் வந்தது. நேற்று முன்தினம் விடியற்காலை இடி மின்னலுடன் கனமழை கொட்டி தீர்த்தது.

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, அப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் நிரம்பியது. மேலும், ஆடி மாதத்தில் எப்பொழுதும் பெய்யாத அளவிற்கு மதுராந்தகம் அடுத்த மொறப்பாக்கம் கிராமத்தில் மிககன மழை கொட்டித் தீர்த்ததால் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது. மேலும், மதுராந்தகம் எண்டத்தூர் சாலையில் பல இடங்களில் சாலையில் தண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. இதை கண்ட பொதுமக்கள், ஆடி மாதத்தில் இப்படி ஒரு மழை வெள்ள சேதத்தை கண்டதில்லை எனக்கூறி ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

இந்த, மழை காரணமாக மதுராந்தகம் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி சேதம் அடைந்துள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் வெள்ள சேதம் குறித்து கணக்கீடு செய்து, நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்த விவசாயிகளுக்கு, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும், மதுராந்தகம், மேல்மருவத்தூர், அச்சிறுப்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இரண்டு நாட்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் பல்வேறு பகுதியில் வீடுகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. குறிப்பாக, அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள புதுப்பேட்டை விநாயகர் கோயில் தெரு, ஸ்ரீராம் நகர், செல்லியம்மன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட வீடுகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இந்த பகுதியை ஒட்டியுள்ள திருச்சி சென்னை – சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் ஓரங்களில் உள்ள கடைக்காரர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் நெடுஞ்சாலையின் கீழ் செல்லும் மழைநீர் வடிகால்வாய்களை ஆக்கிரமிப்பு செய்ததன் காரணமாக, மழை வெள்ளநீர் தேசிய நெடுஞ்சாலையின் கீழே செல்லும் பெரிய பைப்புகள் மற்றும் பாலங்கள் வழியாக சென்று, அருகில் உள்ள வெங்கடேசபுரம் ஏரியல் சேர முடியாமல் இந்த தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள புதுப்பேட்டை குடியிருப்பு பகுதிகளில் உள்ள வீடுகளை சூழ்ந்துள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். வீட்டில் இருந்து வெளியில் வருவதும் வெளியில் இருந்து வீட்டுக்குள் செல்ல முடியாமல் தவித்தனர்.

★ கால்வாய் ஆக்கிரமிப்பே காரணம்

அப்பகுதி மக்கள் கூறுகையில், மழைநீர் வீடுகளில் புகுந்ததற்கு முக்கிய காரணம் தேசிய நெடுஞ்சாலை நிர்வாகத்தினர்தான். அந்தந்த பகுதிகளில் இருக்கக்கூடிய மழைநீர் வடிகால்வாய்களை தனிநபர்கள் ஆக்கிரமிப்பதை அவர்கள் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் தான் இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மழைநீர் செல்ல தடையாக உள்ள பகுதிகளை நேரில் ஆய்வு செய்து, வெள்ளநீர் வடிகால்வாய்களை முறையாக அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பான திட்டமான மக்களுடன் முதல்வர் சிறப்பு திட்ட முகாம்



இராஜபாளையம், ஆக. 14

இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான திட்டமான மக்களுடன் முதல்வர் என்ற சிறப்பு திட்ட முகாம் ஜமீன்நல்லமங்கலம், மீனாட்சி யாபுரம், அருள்புத்தூர், புத்தூர் போன்ற ஊராட்சிகளை ஒருங்கிணைத்து புத்தூர் திருமண மண்டபத்தில் மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் அலுவலர் அனிதா அவர்கள் தலைமையில் நமது மக்கள் MLA S.தங்கப்பாண்டியன் அவர்களும் ஒன்றிய சேர்மன் G.சிங்கராஜ் அவர்களும் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு இபட்டா உள்ளிட்ட அரசு நலத் திட்டங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் பேசிய MLA , தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தப்பட்ட சிறப்பான திட்டமான மக்களுடன் முதல்வர் திட்டம் மூலம் நேரடியாக கோடிக்கனக்கான பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர், மேலும் மக்களுடன் முதல்வர் புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து சேவை திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் எனக்கூறினார்.

இந்நிகழ்வில் வட்டாட்சியர் ஜெயபாண்டி ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் முத்து மாணிக்கம் ஊராட்சி மன்ற தலைவர்கள் கிளைச்செயலாளர் உள்பட பலர் உள்ளனர்.




விழுப்புரம் மாவட்டம்,செஞ்சி சட்டமன்றத் தொகுதி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் தலைமை அமைப்புக்குழு உறுப்பினர் ஆனந்த். அவர்கள்,மத்திய மண்டல பொறுப்பாளர் தமிழரசன். ஆகியோரின் முன்னெடுப்பிலும், செஞ்சி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் ராசநாயகம். கோ.ராஜா. இரா. சுரேஷ். அசோக். மா.மாணிக்கம். ரே. வெங்கடேசன். கோவிந்தன். ஆகியோரின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற இணைப்பு விழா நிகழ்வில் ஏராளமானோர் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொள்கைகளை ஏற்று எனது தலைமையில் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர்,தமிழர் வாழ்வுரிமை மீட்ப்புக்கான பயணத்தில் தங்களை இணைத்துக் கொண்ட அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறோம்.

# உடல் உறுப்பு தான கருத்தரங்கம், உறுதிமொழியேற்பு



விழுப்புரம், ஆக. 14

விழுப்புரம் மாவட்டம். அன்னை தெரேசா சமுதாயக் கல்லூரியில் உடல் உறுப்புதானகருத்தரங்கம் & உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி .இயக்குனர் திரு. V. திருமால் தலைமையில் நடந்தது. கருத்தாளராக விழுப்புரம் ஜூனியர் ரெட் கிராஸ் கன்வீனர் முனைவர் ம.பாபு செல்வதுரை கலந்துக் கொண்டு இரத்ததானம் மற்றும் உடல் உறுப்பு தானத்தின் அத்தியாவசியமான தேவையை எடுத்துரைத்தார். உடல் உறுப்பு தானம் சார்ந்த விழிப்புணர்வு பணியில் இளைஞர்கள். தன்னார்வலர்கள் அற்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துரைத்தார். உடன் விழுப்புரம் காவல் துறை சிறுவர் & சிறுமியர் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. R. செல்வராஜ் மற்றும் சுமார் 100 செவிலியப்பயிற்சி மாணவிகள் உடல் உறுப்புதான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

காஞ்சிபுரம், ஆக. 14

காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது.

இதில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு,

விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர், விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் கலெக்டர் கலைச்செல்வி மோகன், எஸ்பி சண்முகம்,

காஞ்சிபுரம் எம்பி க.செல்வம், காஞ்சிபுரம் எம்எல்ஏ எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர்: குன்றத்தூர் காவல் துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று குன்றத்தூரில் நடந்தது. குன்றத்தூர் பேருந்து நிலையத்தில் தொடங்கிய பேரணியை குன்றத்தூர் நகர் மன்ற தலைவர் சத்தியமூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில், ஏராளமான பள்ளி மாணவர்கள் பேண்டு, வாத்தியங்கள் இசைத்தபடி போதைப்பொருள் தடுப்பு குறித்த வாசகங்களை கையில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர்.

கொல்லச்சேரியில் உள்ள அரசுப்பள்ளி வரை பேரணி சென்றது. அப்போது, பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து பேச்சு போட்டி நடந்தது. நிகழ்வில் நகரமன்ற ஆணையர் ராணி, குன்றத்தூர் காவல் ஆய்வாளர் வேலு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# செங்கல்பட்டு காவல்நிலையத்தில் காதல் ஜோடி தஞ்சம்



செங்கல்பட்டு, ஆக. 14

மதுராந்தகம் அடுத்த குமாரவாடி பஜனை கோயில் தெருவை சேர்ந்தவர் பார்த்தசாரதி மகள் பவித்ரா (21). இவர் செங்கல்பட்டு நகரில் உள்ள தனியார் வங்கியில் வேலை செய்து வருவதாக கூறப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், சாலவாக்கம் அடுத்த காவணிப்பாக்கம் பஜனை கோயில் தெருவை சேர்ந்த தேவன் என்பவரின் மகன் லிங்கேஸ்வரன் (24). இவர் ஒரகடத்தில் உள்ள தனியார் தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு பவித்ராவின் அக்கா நிச்சயதார்த்த விழாவில் லிங்கேஸ்வரனும், பவித்ராவும் முதன்முதலில் சந்தித்து உள்ளனர். அதன்பிறகு தொலைபேசியில் பேசி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காதலை வளர்த்து வந்துள்ளனர். இதை அறிந்த பவித்ராவின் பெற்றோர், காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இருவரும் திருமணம்செய்துவிட்டு, பாதுகாப்பு வழங்க கோரி செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் தஞ்சமடைந்தனர்.

இதை தொடர்ந்து லிங்கேஸ்வரன் வீட்டிற்கு காவல்துறையினர் பாதுகாப்புடன் காதல் ஜோடியை அனுப்பி வைத்தனர். செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் காதல் ஜோடி பாதுகாப்பு வழங்க கோரி தஞ்சமடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும், பவித்ரா வீட்டின் பெற்றோர், உறவினர்கள் இருதரப்பு வழக்கறிஞர்கள் காவல் நிலையத்தில் குவிந்ததால் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

# வருவாய்த்துறை சார்பில் அம்மன் கோயிலுக்கு தாய் வீட்டு சீர்வரிசை: அதிகாரிகள் வழங்கினர்



ஸ்ரீபெரும்புதூர், ஆக. 14

ஸ்ரீபெரும்புதூர் தான்தோன்றியம்மன் கோயிலுக்கு தாய் வீட்டு சீர்வரிசை பொருட்களை வருவாய்த்துறை அதிகாரிகள் வழங்கினர். ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் ஸ்ரீ தான்தோன்றி அம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை ஆடி மாதத்தை முன்னிட்டு தீமிதி திருவிழா 10 நாட்கள் நடப்பது வழக்கம். அதன்படி, இந்தாண்டிற்கான திருவிழா கடந்த 9ம்தேதி காப்புகட்டுதலுடன் தொடங்கியது. வரும் 18ம்தேதி அக்னி குண்டத்தில் பக்தர்கள் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிலையில், தீமிதி திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூர் தாலுகா அலுவலகம் சார்பில் தாய் வீட்டு சீர்வரிசைபொருட்கள், தான்தோன்றி அம்மன் கோயிலுக்கு வழங்கப்படுவது வழக்கம். அந்த வகையில் அம்மனுக்கு சீர்வரிசையாக பட்டு சேலை, வளையல், மஞ்சள், குங்குமம், அபிஷேகப் பொருட்கள், வாசனை திரவியங்கள் மற்றும் பழ வகைகள் என தாசில்தார் சதீஷ் தலைமையில் அதிகாரிகள் மேளத்தளங்கள் முழங்க சீர்வரிசை பொருட்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று கோயிலுக்கு வழங்கினர். நிகழ்வில் வருவாய் துறை அதிகாரிகள், விழாகுழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காவல்துறையில் கழிவுசெய்த வாகனங்கள் 21ம் தேதி ஏலம்

சென்னை, ஆக. 14

தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை:

சென்னை அமலாக்கப் பிரிவு அலுவலகத்தில் காவல்துறையினரால் பயன்படுத்தப்பட்டு கழிவு செய்யப்பட்ட 11 வாகனங்கள் (நான்கு சக்கர வாகனங்கள்4, இரு சக்கர வாகனங்கள்7) வரும் 21ம் தேதி காலை 11.30 மணிக்கு மயிலாப்பூரில் உள்ள காவல்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஏலத்தில் விட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலம் எடுக்க விரும்புவோர் 20ம் தேதி மாலை 5 மணி வரை வாகனங்களை பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

ஏலத்தில்கலந்துகொள்பவர்கள் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் முன்பணமாக₹1000செலுத்தி பதிவு செய்து கொண்டு, ஏலத்தில் பங்கு பெறுவதற்கான டோக்கனை பெற்றுக் கொள்ளலாம். வாகனங்களை ஏலத்தில் எடுத்தவர் உடனடியாக ஏலத்தொகை ரொக்கமாக செலுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் வேலை தேடும் நபர்களே உஷார்..! சைபர் குற்றங்களில் சிக்காமல் இருக்க போலீசார் எச்சரிக்கை

சென்னை, ஆக. 14

வெளிநாட்டில்வேலை தேடுபவர்கள் சைபர் குற்றங்களில் இருந்து எவ்வாறுதங்களைதற்காத்துக் கொள்வது என்பது குறித்து சைபர் க்ரைம் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வெளிநாடுகளில் வேலைதேடும் மக்களை சில போலி முகவர்கள் கவர்ச்சிகரமாண வேலை வாய்ப்புகள் மூலம் ஏமாற்றி டூரிஸ்ட் விசா மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்கள் அங்கு சென்றதும் கட்டாயப்படுத்தி இணைய மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட வைக்கின்றனர். பெரும்பாலும் இதுமாதிரியான சைபர்க்ரைம் கும்பல்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து செயல்படுகின்றன.

சட்டவிரோத வேலை வாய்ப்பு முகவர்கள் மூலம் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளில் வேலைதேடுபவர்களை குறிவைத்து அதிக சம்பளத்தில் வேலைவாய்ப்பு தருவதாகக்கூறி வேலைக்கு எடுக்கின்றனர். இந்த ஏஜென்சிகள் அவர்களுக்கு டேட்டா என்ட்ரி வேலைகள், கால் சென்டர் வேலைகள் மற்றும் பிறமென்பொருள் வேலைகளை தருவதாக உறுதிகூறி நம்பவைக்கின்றன. இவ்வாறு வேலைக்கு சேர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளை அடைந்தவுடன், அங்கு செயல்படும் சைபர் க்ரைம் கும்பல், பாதிக்கப்பட்டவர்களின் பாஸ்போர்ட்டுகளை சேகரித்து அந்த நாடுகளில் இருந்து வெளியேற வழியில்லை என மிரட்டுகின்றனர். மேலும் இந்தியா திரும்புவதற்கு ஆயிரக்கணக்கான சீன யுவான்களை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்படுகின்றனர்.

ஆந்திரா, தமிழ்நாடு, தெலங்கானா, ஹரியானா மற்றும் டெல்லி போன்ற மாநிலங்களில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். பின்னர் அவர்கள் இணைய அடிமைகளாக மாற்றப்படுகின்றனர். இவ்வாறு மாற்றப்பட்ட இணைய அடிமைகள் டிஜிட்டல் மோசடிகள், சட்டவிரோத கடத்தல்கள், முதலீட்டு மோசடிகள், டேட்டிங் மோசடிகள் போன்ற சைபர் க்ரைம்களில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் இருந்து அதிக எண்ணிக்கையில் உள்ள பயணிகள் கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் பயணம் செய்து இந்தியா திரும்பவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் இதுபோன்ற சைபர் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டு மக்களை ஏமாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. எனவே வேலை தேடும் இளைஞர்கள், சைபர் க்ரைம் குற்றங்களில் இருந்து தங்கள் தற்காத்துக் கொள்வது குறித்து கீழ்காணும் எச்சரிக்கை விழிப்புணர்வு நடவடிக்கைகளை கடைப்பிடிக்க போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.

வேலைதேடும் நபர்கள் அறிந்து கொள்ள வேண்டியவை:

★ வெளிநாட்டில் வேலைதேடும் நபர்களுக்கு, வேலைவாய்ப்பு முகவர்கள் தொடர்பு கொண்டால் அவர்கள் பதிவு செய்யப்பட்ட ஏஜென்சிகளா அல்லது போலியான முகவர்களா என்பதை https://emigrate.gov.in/#/emigrate/emigrant/listofraconsolidatereport என்ற லிங்க் இன் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

★ https://emigrate.gov.in/#/emigrate/recruitingagent/listofunregisteredraagenciesoragents என்ற இணைப்பில் வழங்கப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத சட்டவிரோதமான ஆட்சேர்ப்பு முகவர் பட்டியலிலிருந்தும் போலியான தடைசெய்யப்பட்ட முகவர்களை அடையாளம் கண்டறியலாம்.

★ வேலை தேடுபவர்களை வலையில் விழவைக்க கவர்ச்சிகரமான பேக்கேஜ்களுடன் கூடிய வேலைவாய்ப்புகளை பயன்படுத்துவார்கள். இவ்வாறான வேலை வாய்ப்புகளை தொடர்வதற்கு முன் பலமுறை சரிபார்க்க வேண்டும்.

★ வேலைவாய்ப்புகளுக்காக சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்குச் செல்ல ஒரு போதும் ஒப்புதல் அளிக்கக் கூடாது. நீங்கள் அங்கு சென்று உங்கள் வேலையைத் தொடங்கியவுடன் உங்களுக்கு வேலை விசாவைப் பெற்றுத்தருவதாக போலியான ஏஜென்சிகள் உங்களுக்கு உறுதியளிக்கலாம். ஆனால் நீங்கள் அந்த நாடுகளுக்கு சென்றவுடன் உங்கள் பாஸ்போர்ட் மற்றும் விசாக்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு இணைய மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

★ உங்களை தொடர்பு கொண்டு பேசுபவர்கள் மோசடி செய்பவர்கள் என நீங்கள் சந்தேகிக்கும் போதெல்லாம், அவர்களின் செல்போன் எண்ணை சேஃப் போர்டலில் https://cybersafe.gov.in/ சரிபார்க்கவும். இந்த எண் ஏற்கனவே வேறு ஏதேனும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதா என்பதை இது உங்களுக்குத் தெரிவிக்கும்.

★ மேலும் தங்களை தொடர்பு கொண்டவர்கள் மோசடி செய்பவர்கள் என்ற சந்தேகம் எழுந்தால் உடனே சைபர் க்ரைம் https://sancharsaathi.gov.in/sfc/Home/sfccomplaint.jsp இணையதளத்தில் புகார் அளிக்கலாம்.

★ இதுபோன்ற மோசடிகளில் நீங்கள் பாதிக்கப்பட்டிருத்தால், cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் அளிக்கவும் அல்லது நிதி மோசடிகள் நடந்தால் 24 மணி நேரத்திற்குள் 1930க்கு அழைக்கவும். இவ்வாறு சைபர் க்ரைம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் இருந்து அதிக எண்ணிக்கையில் உள்ள பயணிகள் கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் பயணம் செய்து இந்தியா திரும்பவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஸ்ரீபெரும்புதூரில் இருந்து ராஜிவ் ஜோதி யாத்திரை தொடங்கியது: 20ம் தேதி டெல்லி சென்றடைகிறது

சென்னை, ஆக. 14

வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் எம்.எஸ்.திரவியம் தலைமையில் ராஜிவ் ஜோதி யாத்திரை நேற்று பெரும்புதூர் ராஜிவ் காந்தி நினைவிடத்தில் இருந்து தொடங்கியது. தமிழக காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் சிரஞ்சீவி, ஜோதியை ஏற்றி வைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கவுன்சிலர்கள் சுரேஷ்குமார், தீர்த்தி,




மாநில செயலாளர் மோகன்காந்தி மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட காங்கிரஸ் நிர்வாகிகள், யாத்திரை குழு நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த யாத்திரையானது, 30 பேருடன் 5 வாகனங்களில் தரைவழி மார்க்கமாக பல மாநிலங்கள் வழியாக எடுத்து செல்லப்பட்டு டெல்லியை வரும் 20ம் தேதி சென்றடைகிறது. யாத்திரை செல்லும் வழிகளில் ராஜிவ் காந்தி புகழை பரப்பும் வகையில் துண்டு பிரசுரங்களும், வரவேற்பு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுவதாக எம்.எஸ்.திரவியம் தெரிவித்தார்.

# கிழக்கு கடற்கரை சாலை விரிவாக்க பணி வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்

செய்யூர், ஆக. 14

சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி வரையில் சாலை விரிவாக்க பணி கடந்த பல மாதங்களாக நடந்து வருகிறது. இந்த சாலை விரிவாக்க பணிக்காக சாலையோரம் உள்ள பல பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் கடைகள் அகற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக இடைக்கழிநாடு பேரூராட்சிக்குஉட்பட்ட பகுதிகளில் சாலை குடியிருப்புகள் மற்றும் கடை அகற்றப்பட்டு வந்த நிலையில், வெண்ணாங்குப்பட்டு பகுதியில் உள்ள கடைகளை அகற்ற பணியாளர்கள் நேற்று வந்திருந்தனர்.

அவர்களை தடுத்து நிறுத்திய இடைக்கழி நாடு அனைத்து வணிகர் நல சங்கத்தினர் உரிய இழப்பீடு வழங்காமல் கடைகளை இடிக்க கூடாது என எதிர்ப்பு தெரிவித்து, அதிகாரிகளுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு, இடைக்கழிநாடு அனைத்து வியாபாரிகள் நலச்சங்கம் தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். செங்கல்பட்டு மாவட்ட தலைவர் பிரபாகரன் கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் கவுரவ தலைவர் இனியரசு, மாவட்ட இணை செயலாளர் ராஜா, தொகுதி செயலாளர் சசிகுமார், பொருளாளர் வெங்கடேசன், ஆலோசகர்கள் ஏழுமலை, தட்சிணாமூர்த்தி, கடப்பாக்கம் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் தலைவர் வடிவேல், செயலாளர் ரவி, பொருளாளர் சிவகுமார்மற்றும்வியாபாரிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# 77வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தமிழ்நாட்டில் 1.20 லட்சம் போலீஸ் பாதுகாப்பு: கடலோர பகுதிகளில் டிரோன்கள் மூலம் தீவிர கண்காணிப்பு

சென்னை, ஆக. 14

77வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் டிஜிபி சங்கர் ஜிவால் தலைமையில் 1.20 லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.விழா நடைபெறும் ஜார்ஜ் கோட்டையில் போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவுப்படி கூடுதல் கமிஷனர்கள் கண்ணன், நரேந்திரன் நாயர், போக்குவரத்து கூடுதல் கமிஷனர் சுதாகர் ஆகியோர் மேற்பார்வையில் இணை கமிஷனர்கள், துணை கமிஷனர்கள், உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள் மற்றும் காலர்கள் என 9 ஆயிரம் பேர் சிறப்பு பாதுகாப்பு பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



முதல்வர் புனித ஜார்ஜ் கோட்டையில் தேசிய கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தின விழா பேருரையாற்றுகிறார். இதனால் கோட்டை மற்றும் அடை சுற்றியுள்ள பகுதிகளில் காவல்துறை அதிகாரிகள் தலைமையில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கடலோர பாதுகாப்பு படை மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமம் ஆகியோருடன் இணைந்து கடல் பகுதிகளை போலீசார் டிரோன்கள் மூலம் கண்காணித்து வருகின்றனர். விமான நிலையம், ரயில் நிலைங்கள், பேருந்து முனையங்கள், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், கடற்கரை பகுதிகள், வழிபாட்டு தலங்கள் மற்றும் இதர முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 565க்கும் மேற்பட்ட தங்கும் விடுதிகள் மற்றும் ஓட்டல்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சந்தேக நபர்களின் நடமாட்டம் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் காவல் துறைக்கு தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. நான்கு சக்கரமற்றும் இரு சக்கர ரோந்து வாகனங்கள் மூலம் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, முக்கியமான இடங்களில்தடுப்புகள்அமைத்து காவல்துறையினர் மூலம் தீவிர வாகன தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேபோல், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையை தவிர்த்து தமிழ்நாடு முழுவதும் உள்ள 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட லாட்ஜ்கள், தங்கும் விடுதிகள், நட்சத்திர விடுதிகளில் போலீசார் நேற்று முந்தினம் இரவு முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

மாநில பாதுகாப்பை பொருத்தமட்டில் தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சங்கர் ஜிவால் தலைமையில், அனைத்து மண்டல ஐஜிக்கள், போலீஸ் கமிஷனர்கள், டிஐஜிக்கள், மாவட்ட எஸ்பிக்கள் மேற்பார்வையில் இரவு நேரங்களில் ரோந்து பணி, வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு, ஆயுதப்படை, அதிரடிப் படை, ஊர்க்காவல்படை என மொத்தம் 1.20 லட்சம் போலீசார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுதந்திரதினவிழாவுக்கு இன்னும் ஒரு நாள் மட்டுமே உள்ளதால் மாநிலம் முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

டிரோன்கள், ரிமோட் மூலம் இயக்கப்படும் மைக்ரோ லைட் ஏர்கிராப்ட், பாராகிளைடர்ஸ், பாரா மோட்டார்ஸ், ஹேன்ட் கிளைடர்ஸ், ஹாட் ஏர் பலூன்கள் போன்றவற்றை சென்னை பெருநகர காவல் எல்லையில் பறக்க விட 8ம் தேதி முதல் 23ம் தேதி வரை தடைசெய்யப்பட்டுள்ளது. சென்னையில் நாளை மற்றும் நாளை மறுநாள் (அரசு ஏற்பாடுகள்தவிர) தலைமை செயலகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள், முதல்வர் இல்லத்தில்இருந்துதலைமை செயலகம் வரையிலும் செல்லும் வழித்தடங்கள் 'சிவப்பு மண்டலாமாக' அறிவிக்கப்பட்டு, அந்த பகுதிகளில் எந்தவிதமான பொருட்களும் பறக்க விட தடை விதிக்கப்பட்டுள்ளது.

# வண்டலூர் - கேளம்பாக்கம் சாலையில் கனரக வாகனங்கள் செல்ல தடை

கூடுவாஞ்சேரி, ஆக. 14

வண்டலூர் கேளம்பாக்கம் சாலையில் கனரக வாகனங்கள் செல்ல தடை விதித்து தாம்பரம் மாநகர காவல்துறை அறிவித்துள்ளது. சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையான வண்டலூர் ஜிஎஸ்டி சாலையில் தொடங்கி பழைய மாமல்லபுரம் சாலையில் இணையும் 18 கிலோ மீட்டர் கொண்ட வண்டலூர் கேளம்பாக்கம் சாலை ஓரத்தில் 30க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்கள் உள்ளன.



இதில் ஏராளமான தொழிற்சாலைகள், கம்பெனிகள், தனியார் கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இங்கிருந்து தினந்தோறும் சென்னை மற்றும் செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு மாணவர்கள், அன்றாடம் வேலைக்கு சென்று வருவோர் என அனைத்து தரப்பு மக்களும் போக்குவரத்து செய்து வருகின்றனர். இதில் ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள் தினம்தோறும் தொழிற்சாலைகள் கம்பெனிகள் மற்றும் ஏராளமான கிரஷர்கள் இயங்கி வருவதால் வண்டலூர்கேளம்பாக்கம் சாலையில் நாள்தோறும் கடும் போக்குவரத்து ஏற்படுகிறது.

இந்நிலையில், போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக தாம்பரம் மாநகர காவல் துறை மூலம் விளம்பர பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கூறியிருப்பதாவது: நேற்று முதல் காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும், இதேபோல்மாலை 4 மணி முதல் 10 மணி வரையிலும் வண்டலூர் கேளம்பாக்கம் சாலையில் கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது என தாம்பரம் மாநகர காவல் துறையினர் அறிவித்துள்ளது.

# நெல்லிக்குப்பம் ஊராட்சியில் மின் கட்டண மையம் அமைக்க வேண்டும்: பொதுமக்கள் கோரிக்கை

திருப்போரூர், ஆக. 14

நெல்லிக்குப்பம் ஊராட்சியில் மின் கட்டண மையம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய நெல்லிக்குப்பம் ஊராட்சியில் நெல்லிக்குப்பம், அகரம், அம்மாப்பேட்டை ஆகிய மூன்று கிராமங்கள் உள்ளன. அம்மாப்பேட்டை கிராமத்தில் 110 கிலோ வாட் திறன்கொண்ட மின் வழங்கல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்தில்இருந்து 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின் சப்ளை செய்யப்படுகிறது.

இப்பணியில் மின் பராமரிப்பு ஊழியர்கள் ஈடுபடுகின்றனர். ஆனால், நெல்லிக்குப்பம் மின் நிலையத்தில் உதவி செயற்பொறியாளர் பணியிடம் உருவாக்கப்படவில்லை. இதன் காரணமாக நெல்லிக்குப்பம் மின் நிலையத்தில் மின் கட்டணம் செலுத்துதல், புதிய மின் இணைப்பு பெறும் விண்ணப்பங்களை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. இதனால் புதிய மின் இணைப்பு கோரியும், மின் கட்டணம் செலுத்தவும் திருப்போரூர் மின் வாரிய அலுவலகத்திற்கு வரவேண்டிய நிலை உள்ளது. இதன் காரணமாக பொதுமக்களுக்கு நேர விரயமும், வீண் அலைச்சலும் ஏற்படுவதை தவிர்க்க, நெல்லிக்குப்பம் மின் வழங்கல் நிலையத்தில் புதிய உதவி செயற்பொறியாளர் பணியிடம் உருவாக்க வேண்டும் என்றும், மின் கட்டணசெலுத்தும்மையம், புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பங்களை அளிக்கும் வசதி உள்ளிட்டவற்றை ஏற்படுத்தி தர வேண்டுமென்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீரான குடிநீர் வழங்க பொதுமக்கள் கோரிக்கை

மாமல்லபுரம், ஆக. 14

மாமல்லபுரம் அருகே எடையூர் ஊராட்சி உள்ளது. இங்குள்ள கொக்கிலமேடு உலக மாதா கோயில் தெரு, கெங்கையம்மன் கோயில் தெரு, ராஜிவ் காந்தி தெரு, டாக்டர் அம்பேத்கர் தெருக்களில் 130க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த தெருக்களில் தினமும் ஊராட்சி நிர்வாகம் சார்பில் கிணற்றில் இருந்து மின் மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு, பின்னர் தெருவில் உள்ள குழாய்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

அதுவும், குறைந்த நேரம் மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால், அப்பகுதி மக்களுக்கு போதுமானதாக இல்லை.

அப்படி விநியோகிக்கும் குடிநீர் சில நேரங்களில் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை என கூறப்படுகிறது. குறிப்பாக, உலக மாதா கோயில் தெருவில் பல மாதங்களாக குடிநீர் வரவில்லை என கூறப்படுகிறது.

இதனால், அங்குள்ள மக்கள் காலி குடங்களை எடுத்துக் கொண்டு பல இடங்களுக்கு சென்று குடிநீர் எடுத்து வந்து பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே, எடையூர் ஊராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு குடிநீர் பஞ்சத்தை போக்கி உரிய முறையில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இயற்கையை பாதுகாக்கனும்.. தமிழகம் முழுக்க மரக்கன்றுகள் நடும் நடிகர் சௌந்தரராஜா



தமிழில் சுந்தரபாண்டியன், பிகில், ஜிகர்தண்டா, தர்மதுரை, எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது என பல படங்களில் நடித்திருப்பவர் சௌந்தரராஜா. கட்டிங் கேஸ் என்ற மலையாள படத்தில் வில்லன் கதாபாத்திரத்திலும், சாயாவனம் என்ற படத்தில் கதாநாயகனாகவும் நடித்திருந்தார். இந்த படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

சினிமா மட்டுமின்றி சுற்றுச்சூழல் ஆர்வலரான சௌந்தரராஜா இயற்கை வளத்தை மேம்படுத்தும் வகையில் ஏராளமான மரங்களை நட்டு வருகிறார். அந்த வகையில், சௌந்தரராஜா தனது பிறந்தநாள் மற்றும் மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளையின் 8 ஆம் ஆண்டு விழாவை நேற்று கொண்டாடினார்.

இதையொட்டி காஞ்சிபுரம் வாலாஜாபாத்தில் அருகே உள்ள தன்னூர் கிராமத்தில் மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளையின் உறுப்பினர்களுடன் சேர்ந்து 240 மரக்கன்று நட்டார். நேற்று மட்டும் தமிழகம் முழுவதும் 500 மரக்கன்றுகள் மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளை சார்பாக நடப்பட்டது. 6 மாதம் தொடர்ச்சியாக 5000 மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளார். நடுவது மட்டுமில்லாமல் அதை பராமரிக்கவும் முடிவு செய்துள்ளார்.

இதுதவிர மரங்களை நடுவதற்கும் தனது அறக்கட்டளை உதவி செய்யும் என்று சௌந்தரராஜா அறிவித்துள்ளார். மக்கள் தங்களது ஊரில் மரங்களை நடுவதற்கு முன்கூட்டியே தகவல் கொடுத்தால், அவரது குழுவினர் குறிப்பிட்ட ஊரில் மரக்கன்று நடுவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நடிகர் சௌந்தரராஜா மீது கொண்ட அன்பிற்கும், சமூக அக்கறைக்கும் அவரது நண்பர் ஜேப்பியார் பேரன் ஜெய்குமார் (சத்தியபாமா பல்கலைக்கழகம்) மற்றும் அவரது மனைவி Dr சரண்யா ஜெய்குமார் ( Educational Psychologist ) விலை உயர்ந்த சொகுசு கார் ஒன்றை பிறந்த நாள் பரிசாக அளித்துள்ளனர்.

# கல்கி 2898 ஏடி படத்தின் ஓடிடி தேதி அறிவிப்பு




'கல்கி 2898 ஏடி' திரைப்படத்தில் அமிதாப் பச்சன், கமல்ஹாசன், பிரபாஸ், தீபிகா படுகோன் உள்ளிட்ட பிரபல நடிகர்கள் நடித்துள்ளனர். இந்த படம் கடந்த ஜூன் 27 ஆம் தேதி வெளியானது. பிரம்மாண்ட பொருட்செலவில் எடுக்கப்பட்டுள்ள இப்படத்தை நாக்அஸ்வின் இயக்கியுள்ளார்.

மகாபாரத யுத்தமான குருசேத்திரம் நடந்து 6000 வருடங்களுக்கு பிறகு நடக்கும் கதையாக அமைந்துள்ளது கல்கி. சந்தோஷ் நாராயணன் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார். வெளியான முதல் நாளிலேயே ரூ.180 கோடி வசூலுடன் ஆட்டத்தைத் தொடங்கிய 'கல்கி 2898 ஏடி' திரைப்படம் வசூலில் சக்கைபோடு போட்டது. கல்கி திரைப்படம் இதுவரை உலகமெங்கும் 1100 கோடி ரூபாய் வசூலித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. படத்தின் இரண்டாம் பாகத்தை நோக்கி மக்கள் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டு இருக்கின்றனர். இந்நிலையில் படத்தின் ஓடிடி குறித்து தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் இந்தி மொழி ஓடிடி உரிமையை நெட்பிளிக்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளது, தென் இந்திய மொழி உரிமையை அமேசான் பிரைம் ஓடிடி தளம் வாங்கியுள்ளது. திரைப்படம் ஓடிடி தளமான அமேசான் பிரைமில் வரும் ஆகஸ்ட் 23 வெளியாகவுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். அமேசான் பிரைமில் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் மொழிகளில் வெளியாகவுள்ளது.

# சீனு ராமசாமியின் 'கோழிப்பண்ணை செல்லதுரை' படத்தின் டீசர் அப்டேட்



தமிழ் சினிமாவில் எதார்த்தமான வாழ்க்கை கதைகளை மிகவும் அழகாக எடுக்கும் இயக்குனர்களில் ஒருவர் சீனு ராமசாமி. இவர் இதற்கு முன் இயக்கிய நீர் பறவை, தர்மதுரை, மாமனிதன் ஆகிய திரைப்படங்கள் மிகப் பெரியளவில் வெற்றிப் பெற்ற திரைப்படங்களாகும். தர்மதுரை திரைப்படம் விஜய் சேதுபதி, ஐஷ்வர்யா ராஜேஷ் இருவருக்கும் மிக முக்கிய திரைப்படமாக அமைந்தது. மாமனிதன் திரைப்படத்தை தொடர்ந்து சீனுராமசாமி அடுத்ததாக கோழி பண்னை செல்ல துரை திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தில் பிரிகிடா சகா மற்றும் ஏகன் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். பிரிகிடா சகா இதற்கு முன் இரவின் நிழல் திரைப்படத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சில மாதங்களுக்கு முன் ரியோராஜ் நடிப்பில் வெளிவந்த ஜோ படத்தில் ஏகன் நண்பன் கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார். படத்தின் இசையை என்.ஆர் ரகுனாதன் மேற்கொள்ள படத்தை விஷன் சினிமா ஹவுஸ் ப்ரொடக்ஷன் தயாரித்துள்ளது. படத்தின் ரிலீஸ் தேதியும் டீசரும் வரும் ஆக்ஸ்ட் 14 தேதி வெளியாகவுள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

# 'இவங்களுக்கு நான்தான் வாழ்க்கை கொடுத்தேன்னு சொல்ல மாட்டேன்' தனுஷை சாடினாரா? சிவகார்த்திகேயன்



கூழாங்கல் படத்தை இயக்கிய அறிமுக இயக்குநர் பிஎஸ் வினோத்ராஜ் தனது அடுத்த படைப்பாக கொட்டுக்காளி திரைப்படத்தை இயக்கியுள்ளார். சிவகார்த்திகேயன் தயாரிப்பில் சூரி நடிப்பில் உருவாகி இருக்கும் இந்த படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு மக்களின் ஆதரவை பெற்று பல விருதுகளையும் வென்றுள்ளது. இதன் காரணமாக இந்த படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்த படம் ஆகஸ்ட் 23 ஆம் தேதி வெளியாக உள்ளது. சூரி, அன்னா பென் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள 'கொட்டுக்காளி' திரைப்படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி உள்ளது. படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைப்பெற்றது. இவ்விழாவில் படக்குழு மற்றும் சினிமா பிரபலங்கள் கலந்துக் கொண்டனர். மேலும் இவ்விழாவில் இயக்குனர் மிஷ்கின், பாலாஜி சக்திவேல், லிங்குசாமி கலந்துக் கொண்டனர். விழாவில் நடிகர் சிவகார்த்திகேயன் பேசியதாவது " கூழாங்கல் திரைப்படம் பார்த்துவிட்டு, எனக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை பின அதை பற்றி பேசி புரிந்துக்கொண்டேன். இப்படத்தின் கதையை கேட்காமல் நான் இப்படம் தயாரிக்க சம்மதித்தேன் காரணம் இயக்குனர் வினோத்ராஜ். இப்படம் எடுத்ததற்கான காரணம் முதலில் வினோத் ராஜை கொண்டாடத்தான். இப்படம் லாபம் சம்பாதித்தால் அதை மீண்டும் வினோத்ராஜ் இயக்கும் அடுத்த திரைப்படத்திற்கு முன்பணமாக கொடுப்பேன். மிகப்பெரிய லாபம் கிடைத்தால் வினோத்ராஜ் போல் இன்னும் சில இயக்குனர்களை சினிமாவிற்கு அறிமுகப் படுத்துவேன். என் வாழ்க்கையை அமைத்து கொடுத்த இந்த சினிமாவிற்கு நான் செய்யும் சேவைகளாக இதுப்போன்ற படங்களை தயாரிக்க நான் நினைக்கிறேன். சூரி அண்ணனுக்கு இந்தாண்டு மிகப்பெரிய ஆண்டாக அமைந்துள்ளது. கொட்டுக்காளி திரைப்படத்திற்காக சிறந்த நடிகன் விருதை வாங்குவார் என நம்பிக்கை இருக்கிறது. இப்படத்திற்கு ஆதரவு கொடுத்து வெற்றி படமாக அமைந்தால். எஸ்.கே ப்ரொடக்ஷன் நிறுவனத்தில் இருந்து இன்னும் இம்மாதிரியான படைப்புகள் வரும். நான் யாரையும் கண்டு பிடிச்சு இவங்களுக்கு நான் தான் வாழ்க்கை கொடுத்தேன், வாழ்க்கை கொடுத்தேன் என நான் சொல்ல மாட்டேன். ஏனா என்னை அப்பிடி சொல்லி சொல்லி பழக்கிவிட்டார்கள். விழாவிற்கு வந்த அனைவருக்கும் நன்றி" என தெரிவித்தார். இவர் கூறிய இந்த வாக்கியம் நடிகர் தனுஷை மறைமுகமாக சாடினாரா? இல்லை விஜய் டிவியை கூறுகிறாரா? என்ற கேள்வி நெட்டிசன்கள் மத்தியில் எழுந்து இணையத்தில் கமெண்டுகளை பதிவிட்டு வருகின்றனர்.

# 'கொட்டுக்காளி எடுத்ததற்காக வினோத்ராஜின் காலை முத்தமிடுவேன்' மிஷ்கின் நெகிழ்ச்சி பேச்சு




சிவகார்த்திகேயன் தயாரிப்பில் சூரி நடிப்பில் உருவாகி இருக்கும் இந்த படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு மக்களின் ஆதரவை பெற்று பல விருதுகளையும் வென்றுள்ளது. இதன் காரணமாக இந்த படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்த படம் ஆகஸ்ட் 23 ஆம் தேதி வெளியாக உள்ளது. சூரி, அன்னா பென் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள 'கொட்டுக்காளி' திரைப்படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி உள்ளது.

படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைப்பெற்றது. இவ்விழாவில் படக்குழு மற்றும் சினிமா பிரபலங்கள் கலந்துக் கொண்டனர். மேலும் இவ்விழாவில் இயக்குனர் மிஷ்கின், பாலாஜி சக்திவேல், லிங்குசாமி கலந்துக் கொண்டனர்.

விழாவில் பேசிய மிஷ்கின் மிகவும் அழகாக , இலக்கிய நயத்தோடு படத்தையும் , படக்குழுவையும், இயக்குனரையும் பாராட்டி பேசினார். அதில் அவர் சொன்ன முக்கியமான விஷயங்கள் சிலவற்றை பார்ப்போம். அதில் அவர்

"இப்படத்தை ஓட வைப்பதற்காக நான் இந்த மேடையில் அம்மணமாக கூட ஆட தயார் . இந்த படத்தை எடுத்த இயக்குனர் வினோத் ராஜ் மிகப் பெரிய நன்றி. இந்த படத்தை எடுத்ததற்காக அவனுடைய காலை கூட முத்தம் இடுவேன். நான் இளையராஜாவிற்கு பிறகு ஒருவனின் காலை முத்தமிடுவேன் என்றால் அது வினோத் ராஜின் காலை தான், சூரி அந்த கதாப்பாத்திரமாவே வாழ்ந்து இருக்கிறான். தமிழ் நடிகைகள் இந்த மாதிரி நல்ல படங்களில் நடிக்க சம்மதிக்க மாட்டார்கள், அன்னா பென்னிற்கு கண்டிப்பாக இந்த வருடம் தேசிய விருது கிடைக்கும் என வாழ்த்துகிறேன். படத்திற்கு பின்னணி இசையே இல்லாமல் படத்தை இயக்கி என்னை செருப்பால் அடித்து விட்டான் இயக்குனர் வினோத்ராஜ். இப்படத்தை தயவு செய்து அனைவரும் சென்று பாருங்கள். எதெற்கோ பணம் செலவு செய்கிறோம் இப்படத்தையும் சென்று பார்க்க வேண்டும் என மக்களிடம் அன்போடு கேட்டுக்கொண்டார்."

# மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்துக்கு கிரிக்கெட் வீரர் அஸ்வின் ஆதரவு




பாரீஸ் ஒலிம்பிக்கில் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டியில் 50 கிலோ எடைப் பிரிவில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்திய வீராங்கனை வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 100 கிராம் எடை கூடுதலாக இருந்ததால் அவரது பதக்கம் பறிபோனது.

இதைத் தொடர்ந்து தனக்கு வெள்ளிப் பதக்கம் வழங்க வேண்டும் என்று கோரி சர்வதேச விளையாட்டு நடுவர் நீதிமன்றத்தில் வினேஷ் போகத் மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீடு மனு வழக்கில் இன்று இரவு 9.30 மணிக்கு தீர்ப்பு அளிக்கப்படுகிறது. அவருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைக்குமா? என்று நாடே ஆவலுடன் எதிர்பார்க்கிறது. சச்சின், கங்குலி, உள்ளிட்ட பிரபல கிரிக்கெட் வீரர்கள் வினேஷ் போகத் வெள்ளிப் பதக்கத்துக்கு தகுதியானவர் என்று கூறி தங்களது ஆதரவை வெளிப்படுத்தினார்கள். இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிசந்திரன் அஷ்வின் தனது எக்ஸ் பக்கத்தில் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்திற்கு ஆதரவாக பதிவிட்டுள்ளார்.

# பாராலிம்பிக்சில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார் பிரமோத் பகத்.. 18 மாதங்கள் தடை



ஊக்க மருந்து தடுப்பு விதிகளை மீறியதாக கடந்த பாரா ஒலிம்பிக்சில் தங்கம் வென்ற இந்திய பாட்மிட்டான் வீரர் பிரமோத் பகத்துக்கு சர்வதேச பாட்மிட்டன் சம்மேளனம் 18 மாத தடை விதித்துள்ளது. இதன்படி அடுத்த 18 மாதங்களுக்கு சர்வதேச போட்டிகளில் பிரமோத் பங்கேற்க முடியாது. எனவே விரைவில் தொடங்க உள்ள பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பை பிரமோத் இழந்துள்ளார். 12 மாதங்களில் தொடர்ச்சியாக 3 முறை பிரமோத் ஊக்கமருந்து சோதனையில் தோல்வி அடைத்தார். இதனால் அவர் ஊக்கமருந்து தடை விதிகளை மீறியதை உறுதி செய்து விளையட்டுக்கான நடுவர் நீதிமன்றத்தின் ஊக்க மருந்து தடுப்புப்பிரிவு அதிகாரிகள் [Court of Arbitration of Sport (CAS) AntiDoping Division] உறுதி செய்தனர். ஆனால் இதை எதிர்த்து அன்றைய தினம் பிரமோத் தாக்கல் செய்த மனுவை சர்வதேச விளையாட்டு நடுவர் நீதிமன்றம் கடந்த ஜூலை 29ஆம் தேதி நிராகரித்தது. இந்த நிலையில் தான் தற்போது இந்த 18 மாத தடையானது சர்வதேச பாட்மிட்டன் சமேலானதால் விடிக்கப்பட்டுள்ளது. எனவே வரும் ஆகஸ்ட் 23 ஆம் தேதி பாரீசில் தொடங்க உள்ள பாராலிம்பிக்சில் பிரமோத் கலந்து கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த டோக்கியோ பாராலிம்பிக்ஸில் ஆடவர் ஒற்றையர் SL3 பிரிவில் பிரமோத் பகத் தங்கம் பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# முதல் ஒலிம்பிக்ஸ் இதுதான்.. 184 நாடுகளை விட அதிக தங்கம் வென்ற பிரான்ஸ் நீச்சல் வீரர்



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இந்த வருடம் நடைபெற்றுவந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நேற்று முன் தினம் நிறைவு பெற்றது. சுவாரஸ்யமான தருணங்கள் பல நிறைந்ததாக இந்த வருட ஒலிம்பிக்ஸ் போட்டிகள் அமைந்தன.

அந்த வகையில் அனைவரையும் வாயடைக்க வைக்கும் வகையில் பிரான்ஸ் நீச்சல் வீரர் லியான் மார்ச்சண்ட் அதிரடியான சாதனைக்குச் சொந்தக்காரராக உள்ளார்.

அதாவது, பாரீஸ் ஒலிம்பிக்ஸில் பங்கேற்ற மொத்த நாடுகளில், 184 நாடுகளை விட அதிக தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார் லியான் மார்ச்சண்ட்.

இந்த வருட ஒலிம்பிக்சில், 200 Breaststroke, 200 L Butterfly, 200 LLi Individual Medley, 400 மீட்டர் Individual Medley ஆகிய போட்டிகளில் லியான் மார்ச்சண்ட் தங்கம் வென்று அசத்தியுள்ளார். மேலும் 4x400 மீட்டர் Medley Relayவில் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளார். 22 வயதே ஆகும் லியான் மார்ச்சண்ட் பங்கேற்கும் முதல் ஒலிம்பிக்சே இந்த பாரீஸ் ஒலிம்பிக்ஸ் தான் என்பது குறிப்பிடத்தக்கது.


# விமர்சித்த சிவம் துபே மனைவி... ஜெய் ஷாவை துணைக்கு அழைத்த பாஜக பெண் தலைவர்



இந்திய அணியின் ஆல் ரவுண்டரான சிவம் துபே 2021 ஆம் ஆண்டு தனது நீண்ட நாள் காதலியான அஞ்சும் கானை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின்பும் அஞ்சும் கான் இஸ்லாம் மதத்தையே பின்பற்றி வருகிறார். இந்நிலையில், அஞ்சும் கான் பாஜகவின் சிறுபான்மை பிரிவு தலைவர் நசியா கானை விமர்சித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

அந்த பதவியில், முகமது நபிக்கு எதிராக தொடர்ச்சியாக நசியா கான் பேசி வருகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று #arrestnaziaelahikhan என்ற ஹேஸ்டேக் உடன் அவர் பதிவிட்டிருந்தார். அந்த பதிவு வைரலானதை தொடர்ந்து அவர் அந்த பதிவை நீக்கிவிட்டார். தற்போது அந்த பதிவிற்கு பாஜகவின் சிறுபான்மை பிரிவு தலைவர் நசியா கான் பதில் அளித்துள்ளார். அவரது பதிவில், நீங்கள் ஒரு இந்துவை திருமணம் செய்துள்ளீர்கள்.

நீங்கள் இப்போது இஸ்லாத்தின் ஒரு பகுதி அல்ல. எனக்கு எதிரான வன்முறையை தூண்டும் பொய்யான தகவலை நீங்கள் வெளியிட்டுள்ளீர்கள். பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா, துபேவை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார். அவர் தனது பதிவில் பிசிசிஐ, உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் டெல்லி காவல்துறையை டேக் செய்துள்ளார்.



புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்

**விளக்கம்:**

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழமுடியாதவர் தம்மைத் தாம் நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்ளக் காரணம் என்ன?

# காதல் இதயங்களை ஒன்று சேர்த்த பாரீஸ் ஒலிம்பிக்ஸ்.. அசர வைக்கும் புதிய சாதனை

காதல் நகரத்தில் ஒரு சாதனை: வீரர்களால் அதிக காதல் பிரபோசல்கள் செய்யப்பட்ட ஒலிம்பிக் தொடர் என்ற சாதனையை படைத்துள்ளது பாரீஸ் ஒலிம்பிக்ஸ் தொடர். 17 நாட்கள் நடைபெற்ற பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் 9 பிரபோசல்கள் நடைபெற்றுள்ளன. ★ பிரான்ஸ் தடகள வீராங்கனை ஆலிஸ் ஃபினோட் 3000மீ ஸ்டீபிள்சேஸ் சாதனையை முறியடித்து, போட்டிக்கு பிறகு தனது காதலனிடம் பிரபோஸ் செய்து கொண்டாடினார்.

★ சீன பேட்மிண்டன் வீரர் லியு யு சென் தங்கம் வென்ற பிறகு ஹுவாங் யா கியோங்கிற்கு பிரபோஸ் செய்தார். ★ பிரெஞ்சு பெண்கள் ஸ்கிஃப் மாலுமிகளான சாரா ஸ்டெயார்ட் மற்றும் சார்லின் பிகோன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று கரை திரும்பியபோது அவர்களது பாட்னர்கள் திருமணத்திற்கு முன்மொழிந்தனர். ★ அமெரிக்க ஒலிம்பியன் ஜஸ்டின் பெஸ்ட், தனது நாட்டிற்காக ரோயிங்கில் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாறு படைத்தார். அவர் தனது காதலியான லைனி டங்கனுக்கு 2,700 மஞ்சள் நிற ரோஜாக்களுடன் பிரபோஸ் செய்தார். ★ அர்ஜென்டினா ஆண்கள் ஹேண்ட்பால் அணியை சேர்ந்த பாப்லோ சிமோனெட், தனது நீண்டகால காதலியும் ஹாக்கி வீரருமான மரியா பிலார் காம்பாய்க்கு பிரபோஸ் செய்தார்.

★ அமெரிக்காவின் ஷாட் புட்டர் பேட்டன் ஒட்டர்டால் தனது காதலி மேடி நில்லஸுடன் ஈபிள் கோபுரத்திற்கு முன்பாக நிச்சயதார்த்தம் செய்து கொண்டார். ★ பிரேசிலின் டிரிபிள் ஜம்பர், அல்மிர் டோஸ் சாண்டோஸ் தனது காதலி தலிதா ராமோஸ்க்கு பிரபோஸ் செய்தார்.

★ அமெரிக்காவின் அலெவ் கெல்டர் சக ரக்பி வீரருமான கேத்ரின் ட்ரெடரை பிரபோஸ் செய்தார். ★ இத்தாலிய ரிதம் ஜிம்னாஸ்ட் அலெசியா மவுரெல்லிக்கு மாசிமோ பெர்டெல்லோனி பிரபோஸ் செய்தார். நிறைவு விழாவின்போது பேசிய பாரீஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டு குழுத் தலைவர் டோனி எஸ்டன்குட், அன்பின் இந்த உணர்வுகள் என்றும் நிலைத்திருக்கும் என தெரிவித்தார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.